பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 15 புதன்கிழமை 29.06.2022 கதிர் 236

**இனிது ரகசியம் அல்ல!**

எரிபொருள்களைப் பதுக்கிக் கொள்ளை லாபத்துக்கு விற்கும் பிரகிருதிகள் குறித்து நண்பர் ஒரு வர் கவலைப்பட்டார். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்றும் அவர் கேட்டார்.

எனக்கு சோ நடித்த 'முகமது பின் துக்ளக்' ☞2

# அவசர தேவைக்கு எரிபொருளை இந்தியாவிடமிருந்து பெற முயற்சி

## பெட்ரோலிய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியுடன் இலங்கைத் தூதர் மிலிந்த மொரகொட பேச்சு



கொழும்பு, ஜூன் 29

இலங்கையின் அவசர எரிபொருள் தேவைகள் குறித்து இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட இந்தியாவின் பெட்ரோலிய விவகார அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியுடன் புதுடில்லியில் அவசர பேச்சுகளை மேற்கொண்டுள்ளார். ☞03

## பொது சுகாதார தொழிற்சங்கங்கள் இன்றும் நாளையும் வேலைநிறுத்தம்



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக முன்வைத்து பொது சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பினர் இன்றும் நாளையும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட ☞2

## பத்து நாள்களில் 4,000 கோடி ரூபாவுக்கு நோட்டுகளை அச்சிட்டதாம் மத்திய வங்கி




மத்திய வங்கி கடந்த 10 நாள்களுக்குள் 4,000 கோடி ரூபா பணத்தை அச்சிட்டுள்ளது. இவ்வாறு பணத்தை அச் சிடுவதால் நாட்டில் பணவீக்கம் மேலும் மேலும் அதிகரிக்குமே தவிர குறைவடையாது. நாட்டின் உண்மையான பிரச்சினைகளை அரசாங்கம் இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். ☞2

## இலங்கை நெருக்கடி குறித்து ஜி7 மாநாட்டில் மோடி கருத்து



இலங்கை எதிர்கொண்டுள் நெருக்கடி குறித்து ஜி 7 உச்சிமாநாட்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் உணவுப் பாது காப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை ☞2

## மேலும் இரண்டு கோடி டொலர் நிதி அமெ. உதவியாக பைடன் அறிவிப்பு



இலங்கையின் உணவுப் பாது காப்பை உறுதிப்படுத்த இரண்டு கோடி டொலரை (சுமார் 720 கோடி ரூபாவை) அமெரிக்கா உதவியாக வழங்கவுள்ளதாக அமெரிக்க அரச தலைவர் ஜோ பைடன் அறிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஜி7 நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துரைக் கும் போதே ஜோ பைடன் இதனைத் தெரிவித்தார்.

8 லட்சத்துக்கும் ☞2

## நாட்டின் நிலைமை மிக மோசம் அதைப் புரிந்து கொள்ளுங்கள்!

### அரசு, ஜனாதிபதி மற்றும் அரசியல் கட்சிகளிடம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மன்றாட்டம்




கொழும்பு, ஜூன் 29

தற்போதைய சூழ்நிலையின் பாரதூரத்தன்மையையும், அதன் விளைவாக நாட்டின் சமூக மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கக் கூடியவகையில் ஏற்படத்தக்க பின்விளைவுகளையும் புரிந்துகொள்ளுமாறு ஜனாதிபதி, அரசாங்கம், அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட தரப்பினரிடம் கேட்டுக் கொள்கின்றோம் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. ☞03

## கூட்டமைப்புத் தலைவர்களுடன் ஜப்பான் தூதுவர் யாழில் சந்திப்பு



(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜூன் 29

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி நேற்றைய தினம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை கொக்குவிலிலுள்ள தனியார் விருந்தினர் ☞2

## தன்னாட்சி, தற்சார்பு, தன்நிறைவு அடைய இறைவன் ஈந்த வரப்பிரசாத நேரம் இதுவே

### நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி. சுட்டிக்காட்டுகிறார்



தன்னாட்சி, தற்சார்பு, தன்நிறைவு என்ற உயரிய நிலையை எட்டுவதை நோக்கி நாம் முன்னேறுவதற்கு தீவிர முயற்சி எடுக்க வேண்டிய பொருத்தமான சந்தர்ப்பம் இது தான். இன்றைய நிலைமையை எமக்கு இறைவன் ஈந்த ஒரு வரப்பிரசாதமாகவே நான் பார்க்கின்றேன்.

இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

'மாதத்திற்கொரு கேள்வி' என்று மகுடமிட்டு "வட, கிழக்கு தமிழ் ☞03

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திரைப்படம்தான் நினைவுக்கு வந்தது. இந்தியாவில் இந்திரா காந்தியின் ஆட்சியில் எமர்ஜென்ஸி கொண்டுவரப்பட்டு, அடக்குமுறைகளும் ஏவி விடப்பட்ட சமயத்தில், இந்திராவின் ஆட்சியைக் கிண்டலடிக்கும் விதத்தில் இந்தப் படத்தைத் தானே எழுதி, நடித்து, தயாரித்து, வெளியிட்டார் சோ. ஆனால் இந்திராகாந்தி அரசு அந்தப் படத்துக்கு அப்போது தடை விதித்து விட்டது.

புராதன புதைகுழி ஒன்றைத் தோண்டும், போது சுமார் எழுநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் உயிர்த்தெழுந்த துக்ளக்காக கதை விட்டுக் கொண்டு படத்தில் தோன்றுவார் சோ.

முகமது பின் துக்ளக்காக மக்கள் முன் அறிமுகமாகும் சோ, பொதுத் தேர்தலில் ஒரே ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர், 350 எம்.பிக்களை விலைக்கு வாங்கிப் புதிய அரசு அமைத்துத்தாம் பிரதமராவார். மற்றைய 350 எம்.பிக்களும் பிரதிப் பிரதமர் என்று அறிவித்து அவர்கள் காதில் பூச்சுற்றுவார்.

செய்தியாளர்கள் பிரதமர் துக்ளக்கைப் பேட்டி காண்பார்கள்.

"லஞ்சப் பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போகிறீர்கள்?" – என்று கேட்பார் ஒரு செய்தியாளர்.

"லஞ்சம் ஏன் பிரச்சினை?" – என்ற பாணியில் பதில் கேள்வி தொடுப்பார் துக்ளக்.

"லஞ்சம் சட்ட விரோதமே" என்று பதிலளிப்பார் செய்தியாளர். உடனடியாக தீர்வை அறிவிப்பார் துக்ளக். என்ன தீர்வு தெரியுமா?

"லஞ்சம் சட்டவிரோதம் என்பதால் தானே அதனால் பிரச்சினை. அதை சட்டரீதியாக மாற்றுவோம். ஒரு பியோன் ஒரு நாளைக்கு 50 ரூபாய்க்குக் குறையாமல் கட்டாயம் லஞ்சம் வாங்க வேண்டும் என்று அறிவித்தால் போயிற்று" என்பார் பிரதமர் துக்ளக். ஒவ்வொரு பதவி நிலைக்கும் தினசரி கட்டாயம் வாங்க வேண்டிய லஞ்சத் தொகை பற்றி அறிவித்து, அதனை சட்டரீதியாக்கும் தீர்மானத்தைப் போடலாம் என்பார் பிரதமர் துக்ளக்.

சத்தியமாகச் சொல்கிறேன், அது போன்றுதான் இப்போது எரிபொருள் விவகாரத்துக்கும் துக்ளக் பாணி தீர்வு ஒன்று வந்திருப்பதாகத் தெரிகிறது.

நாடாளுமன்றத்தின் கடைசி அமர்வின் போது – அதாவது கடந்த புதன் கிழமை – பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது திட்டங்கள் பற்றிய உரையை ஆற்றி முடித்ததும் "உங்களை மூன்று கேள்விகள் கேட்கலாமா?" என்று பீடிகையோடு சுமந்திரன் கேள்விகளை எழுப்பினார் என இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அந்தக் கேள்விகளில் ஒன்று எரிபொருள் பற்றியது.

"தனியாரும் எரிபொருள் இறக்குமதி செய்ய அனுமதிக்கப் போகிறீர்களா?" – என்று சுமந்திரன் கேட்டபோது, அதற்குச் சரியான பதில் கூறாமல் அப்போதைக்குச் சமாளித்தார் பிரதமர் ரணில்.

ஆனால் நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தனியாருக்கும் எரிபொருள் இறக்குமதி செய்து சில்லறையாக விற்பனை செய்ய – விநியோகிக்க – அனுமதி அளிக்கப்படுவதாகச் செய்திகள் வெளியாகி இருக்கின்றன

அதன் பின்புலத்தில்தான், நான் குறிப்பிடும் துக்ளக் தீர்மானம் நடைமுறைக்கு வரப்போகிறது.

இலங்கையிலிருந்து பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலமும் பிற வழிகளிலும் வெளிநாட்டில் அந்த நாட்டு நாணயத்தில் வருவாயை ஈட்டிக் கொள்ளும் நம் உள்ளூர் வர்த்தகர்கள், அந்த உழைப்பை – லாபத்தை – அவற்றைப் பெற்ற நாடுகளிலேயே சேமித்து வைத்திருக்கிறார்கள். இங்கு சட்டரீதியாக அவற்றை கொண்டு வந்தால், செலாவணி மாற்றமாகப் போதிய இலங்கை ரூபா கிடைக்காது என்பது அவர்களின் கருத்து.

இப்போது தனியார் தங்கள் விருப்பப்படி, தங்கள் விலைக்கு, தங்கள் வெளிநாட்டு நாணயத்தைக் கொடுத்து, எரிபொருளை இறக்குமதி செய்து, உள்ளூரில் தாங்கள் விரும்பிய விலையில் விற்பதற்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. இதில் இரண்டு விடயங்கள் நடைபெறும் என அரசு எதிர்பார்க்கிறது.

ஒன்று – அந்த வெளிநாட்டில் சேமிக்கப்பட்ட நம்மவர் உழைப்பு எரிபொருள் கொள்வனவு வடிவத்தில் இலங்கைக்கு வரும். எரிபொருளுக்காக அரசு செலவிட வேண்டிய வெளிநாட்டு செலாவணி அளவு குறையும். அதே நேரம் உள்நாட்டில் எரிபொருள் நெருக்கடியும் தீரும்.

ஆனாலும் இந்த விடயத்தில் ஒரு சிக்கல் இருக்கின்றது. எரிபொருளை இறக்குமதி செய்வோர் தங்களுக்கு விருப்பிய விலையில், தங்கள் செலவுக்கு ஏற்ப, விலையைத் தீர்மானித்து விற்க தற்கு அனுமதிக்கப்பட வேண்டும், அனுமதிக்க போகிறார்கள். அப்போது அவர்கள், தற்சமயம் கள்ளச் சந்தை வியாபாரம் செய்வோரோடுதான் போட்டி போட வேண்டியிருக்கும்.

அதாவது அரசாங்கம் தீர்மானித்த விலைக்கு அரச எரிபொருள் விற்பனை நிலையங்கள் அவற்றை விற்க, வெளியில் தனியார் தாங்கள் இறக்குமதி செய்த எரிபொருளைத் தாங்கள் தீர்மானிக்கு விலைக்கு விற்க வேண்டும். அதாவது கள்ளச் சந்தை வியாபாரிகளோடு போட்டி போட்டுக் கொண்டு அவர்கள் விற்பனை செய்ய வேண்டியிருக்கும்.

மக்கள் தங்கள் தேவைக்கும் அவசியத்திற்கும் ஏற்ப, இப்போது வெளியில் கள்ளச் சந்தை வியாபாரிகளிடம் அறா விலைக்கு எரிபொருளை வாங்குவது போல அப்போது வாங்க வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

அதாவது கள்ளச் சந்தை வியாபாரத்திற்கு அரசு இனி லைசென்ஸ் கொடுத்து சட்ட ரீதியாக்கப் போகின்றது – துக்ளக் லஞ்சத்தை சட்டரீதியாக ஆக்கியமை போன்று.

இதற்கிடையில் கடனுக்கு எரிபொருள் கேட்டு பல நாடுகளுக்கும் அமைச்சர்கள் பறக்கிறார்கள். ஓர் அமைச்சர் ரஷ்யாவுக்குச் செல்கிறார். இரண்டு அமைச்சர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளனர். அதில் ஒருவர் முஸ்லிம். அவரைக் கூட்டிப்போனமைக்குப் பின்னாலும் ஒரு சூத்திரம் அடங்கி இருப்பதாக தெரிகிறது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை அடுத்து, அதுவரை இங்கு முஸ்லிம் மக்கள் மத்தியிலே உதவித்திட்டங்களை முன்னெடுத்து வந்த – நேரடியாக சமூக சேவைகளில் ஈடுபட்ட – அரச சார்பற்ற பல முஸ்லிம் அமைப்புகள் மீது அரசபாதுகாப்புத்துறை கண் மூடித்தனமாகப் பாய்ந்தது. அப்போது ஏறத்தாழ இங்கு தடை செய்யப்பட்ட அமைப்பாக பிரகடனப்படுத்தப்பட்ட, ஒரு மத்திய கிழக்கு நாட்டின் இஸ்லாமிய தொண்டர் அமைப்புத்தான் இப்போது அந்த நாட்டில் இலங்கை எரிபொருள் பெறுவதற்கான அனுசரணை ஏற்பாடுகளை முன்நின்று செய்கிறதாம். ஓடமும் ஒருநாள் வண்டியில் போகும் என்பார்களே. அதுதான் நிலைமை.

இதற்கிடையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸிடம் தாமே நேரில் சென்று எரிபொருள் பிச்சை கேட்க ஜனாதிபதியே நேரடியாக யாசகப் பயணம் போகப்போகின்றார் என்றும் ஒரு செய்தி வந்துள்ளது.

இஸ்லாமிய அமைப்புகளுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிராக பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை கட்டவிழ்த்து விட்டோர் இன்று அவர்களிடமே சரணாகதி அடையும் நிலை வந்திருக்கிறது. வண்டியில் ஏற வேண்டிய ஓடத்தின் நிலைமை தான்.

– மின்னல் –

## மேலும் இரண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்பட்ட இலங்கை குழந்தைகளுக்கு உணவளிக்கும் மற்றும் 27,000 க்கும் மேற்பட்ட கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு உணவு வழங்கும் ஊட்டச்சத்து திட்டத்திற்கு ஆதரவளிப்பதை இந்த நிதியுதவி நோக்கமாகக் கொண்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்கு இரண்டு கோடி டொலர் கூடுதல் உதவி வழங்குவதாக அரச தலைவர் ஜோ பைடன் அறிவித்திருப்பது, உணவுப் பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம் மற்றும் அனைத்து இலங்கை மக்களின் பொருளாதார நல்வாழ்வுக்கான அமெரிக்காவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை நிரூபிப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ளார்.

# வின்சன் புளோறன்ஸ் ஜோசப்பின் முதலாம் ஆண்டு நினைவேந்தல்!

ஊடக செயற்பாட்டாளரும், மொழிபெயர்ப்பாளரும் இலக்கியவாதியுமான அமரர் வின்சன் புளோறன்ஸ் ஜோசப் அவர்களது முதலாம் ஆண்டு நினைவேந்தல் யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

குருநகர் புதுமை மாதா கோவில் கிழக்கு வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் கடந்த திங்கட்கிழமை இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

நினைவேந்தலின் போது அவரது உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தலில் நினைவுப் பேருரையை அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் 'தமிழ் ஊடகப்பரப்பில் மொழிபெயர்ப்பியல் கலை' எனும் பெயரில் ஆற்றினார்.

## பத்து நாள்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனை அவர் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கடந்த ஜனவரி முதல் இம்மாதம் வரை ஒவ்வொரு மாதமும் அரசாங்கம் எரிபொருள்களின் விலைகளைத் தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

மார்ச் மாதத்தில் மாத்திரமே எரிபொருள் விலை அதிகரிக்கப்படவில்லை. பணவீக்கம் அதிகமாகவுள்ள நாடுகள் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்திலுள்ளது.

எரிபொருள்களின் விலைகள் தொடர்ந்தும் அதிகரிக்கப்பட்டாலும் , எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளன.

தற்போது பதிவு செய்து சிட்டைகளை (டோக்கன்கள்) வழங்கும் முறைமையின் கீழ் எரிபொருளை விநியோகிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த முறைமையைப் பின்பற்றினாலும், வழங்குவதற்கு எரிபொருள் இல்லை என்பதே உண்மையாகும். அத்தோடு பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் நெருக்கடிக்கான தீர்வு இதுவல்ல. இந்த தீர்மானத்தை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

கடந்த 10 நாள்களில் மத்திய வங்கி 4,000 கோடி ரூபா பணத்தை அச்சிட்டுள்ளது. இவ்வாறு பணத்தை அச்சிடுவதால் பணவீக்கம் மேலும் அதிகரிக்குமே தவிர குறைவடையாது.

இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக இந்த அரசாங்கம் இன்னும் உண்மையான பிரச்சினையை உணரவில்லை என்பது தெளிவாகிறது.

அரசமைப்புத் திருத்த விவகாரத்திலும் அரசாங்கம் மந்த போக்குடனேயே செயற்படுகிறது. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து இவ்வாரம் முதல் ஐக்கிய மக்கள் சக்தி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவுள்ளது. – என்றார்.

## பதில் கல்வி அமைச்சராக பந்துல குணவர்த்தன நியமிப்பு

பதில் கல்வி அமைச்சராக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ரஷ்யாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்த நிலையிலேயே மேற்படி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## பொது சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் உட்பட 8 துணை சுகாதார தொழிற்சங்கங்களும் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளன என பொது சுகாதாரத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் உபுல் றோஹண அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்புத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடுதியில் சந்தித்தார்.

நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள ஜப்பான் தூதுவர் சமகால நிலைமைகள் தொடர்பில் பல்வேறுபட்ட தரப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை நெருக்கடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியா மேற்கொண்டுள்ளது என நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக அயல் நாடான ஆப்கானிஸ்தானிற்கு மனிதாபிமான உதவியாக கோதுமையை அனுப்பி வைத்துள்ளோம். பூகம்பத்திற்கு பின்னர் முதன்முதலில் அவசர உதவிகளை வழங்கியது இந்தியாவே. எங்கள் அயல் நாட்டின் உணவுபாதுகாப்பை உறுதிசெய்வதற்காக உதவி வருகின்றோம். – என அவர் தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர்
Kalaikkathir

## நாட்டின் நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உணவுற்பத்தி மற்றும் விநியோகம் உள்ளடங்கலாக பொருளாதாரத்தின் அனைத்துக் கூறுகள் மீதும் எரிபொருள் தட்டுப்பாடு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள அந்தச் சங்கம், எரிபொருள் விநியோகம் தொடர்பில் உண்மையான தகவல்களை வெளியிடுவதை விடுத்து அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய பொய்யான நம்பிக்கை பாரிய பின்விளைவுகளைத் தோற்றுவித்திருப்பதாகவும் கடுமையாச் சாடியுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் மிகக்குறுகிய காலத்தில் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்குரிய திட்டங்கள், எரிபொருள் நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான செயற்திட்டம் என்பன பற்றிய உண்மையானதும், சரியானதுமான தகவல்களை உரிய காலப்பகுதியில் மக்களுக்கு வழங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியிருக்கும் அச்சங்கம், தற்போதைய சூழ்நிலையில் பாரதூரத் தன்மையையும் அதன் விளைவாக நாட்டின் சமூக மற்றும் பொருளாதார ஸ்திரத் தன்மையை சீர்குலைக்கக்கூடியவகையில் ஏற்படத்தக்க பின்விளைவுகளையும் புரிந்துகொள்ளுமாறு ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக்கொண்டுள்ளது.

எரிபொருள் விநியோகம் தொடர்பில் அரசாங்கம் வழங்கிய தவறான தகவல்கள் மற்றும் அதனால் மக்களின் வாழ்க்கை மீது ஏற்பட்ட தாக்கங்கள் தொடர்பில் கடுமையான விசனத்தை வெளிப்படுத்தி இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் பாரிய பொருளாதார நெருக்கடி மற்றும் அதன் காரணமாக குறிப்பாக எரிபொருள் உள்ளிட்ட பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு என்பன குறித்தும் அவை பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை, நாட்டு நிர்வாகம், வணிக செயற்பாடுகள் மற்றும் சமூக ஸ்திரத் தன்மை ஆகியவற்றின் மீது ஏற்பாடுத்தியுள்ள தாக்கம் குறித்தும் நாம் மிகுந்த கரிசனை கொண்டிருக்கின்றோம். இது நாட்டின் சட்டத்தின் ஆட்சியையும் கேள்விக்குட்படுத்தியுள்ளது.

அரசாங்கம் கடந்த சில நாள்களாக எரிபொருள் விநியோகம் தொடர்பில் பல்வேறுபட்ட அறிவிப்புக்களை வெளியிட்டு வந்துள்ளது.

இருப்பினும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் மூலம் அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய தவறான நம்பிக்கையினால் அவர்கள் இருளுக்குள் வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற விடயம் வெளிப்பட்டுள்ளது.

அடுத்த தடவை நாட்டிற்கு அவசியமான எரிபொருள் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ள திகதி அறியப்படாதவொன்றாக இருக்கின்றது. அதுமாத்திரமன்றி ஏற்கனவே கையிருப்பிலிருந்த நிதி ஏன் உரியவாறு கையாளப்படவில்லை என்பதற்கான சரியான விளக்கமெதுவும் வழங்கப்படவில்லை.

அரசாங்கத்தின் அறிவிப்புக்களால் ஏற்பட்ட விளைவுகள் இலங்கையில் எரிபொருள் விநியோகம் தொடர்பில் நிலவுகின்ற குழப்பநிலையையும் உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் உருவாகியிருக்கும் அவநம்பிக்கையையும் காண்பிக்கின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையை வெகுவாகப் பாதிக்கும் எரிபொருள் விநியோகத்துடன் தொடர்புடைய தற்போதைய நிலை குறித்து அரசாங்கம் உண்மையானதும், சரியானதுமான தகவல்களை உரிய நேரத்தில் வழங்கத்தவறியமை குறித்து நாம் அவதானம் செலுத்தியுள்ளோம்.

பெற்றோல், டீசல் மற்றம் மண்ணெண்ணெய் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக நாடளாவிய ரீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகளில் காத்திருக்கவேண்டிய நிர்ப்பந்தம் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அவர்கள் சுமார் 24 மணித்தியாலங்களுக்கும் அதிக நேரம் எரிபொருள் நிரப்பு நிலைங்களில் காத்திருக்க வேண்டியிருப்பது பாரிய நேரவிரயத்தைத் தோற்றுவித்துள்ளது. அதுமாத்திரமன்றி இந்த எரிபொருளுக்கான நீண்ட வரிசைகள் சமூகங்களுக்கு இடையில் அமைதியின்மையையும் வன்முறைகளையும் மக்கள் - பொலிஸாருக்கு இடையிலான முரண்பாடுகளையும் தோற்றுவித்துள்ளன.

எரிபொருள் வரிசைகளில் காத்திருந்த பலர் உயிரிழந்த சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன, கறுப்புச்சந்தையில் எரிபொருள் மிக உயர்வான விலைக்கு விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் அது குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு உரிய அதிகாரிகளால் மிகக்குறைந்தளவிலான முயற்சிகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்தோடு இம்மாதம் முதல் வாரத்தில் எரிவாயுக் கொள்கலன்கள் கப்பல் மூலம் நாட்டை வந்தடையும் என்று கூறப்பட்டிருந்த போதிலும், வீதிகளில் எரிவாயு சிலிண்டர்களுடன் மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

எரிபொருள் தட்டுப்பாடானது உணவுற்பத்தி மற்றும் விநியோகம் உள்ளடங்கலாக பொருளாதாரத்தின் அனைத்துக் கூறுகள் மீதும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக தற்போதைய சூழ்நிலையில் மிகவும் அவசியமானதாக இருக்கின்ற இலங்கையின் ஏற்றுமதிகள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதுடன் நீதி, நிர்வாக செயற்பாட்டின்மீது எதிர்மறைத்தாக்கத்தைத் தோற்றுவித்துள்ளது.

மேலும் அனைத்து மக்களுக்கும் நியாயமானதும், சமமானதுமான முறையில் எரிபொருள் விநியோகிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் அரசாங்கம் தவறியிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் மிகக்குறுகிய காலத்தில் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்குரிய திட்டங்கள், எரிபொருள் நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான செயற்திட்டம் என்பன பற்றிய உண்மையானதும், சரியானதுமான தகவல்களை உரிய காலப்பகுதியில் மக்களுக்கு வழங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் அதேவேளை, அனைத்துத் தரப்பினருடனும் கலந்தாலோசித்து அனைவருக்கும் நியாயமானதும் சமமானதுமான முறையில் எரிபொருள் விநியோகிக்கப்படுவதையும், பொதுப் போக்குவரத்து சேவை பாதிக்கப்படாமல் இருப்பதையும் உறுதிப்படுத்துவதற்கான செயற்திட்டத்தை வெளியிடுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

அது மாத்திரமன்றி தற்போதைய சூழ்நிலையில் பாரதூரத்தன்மையையும், அதன் விளைவாக நாட்டின் சமூக மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கக்கூடியவகையில் ஏற்படத்தக்க பின்விளைவுகளையும் புரிந்துகொள்ளுமாறு ஜனாதிபதி, அரசாங்கம், அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட தரப்பினரிடம் கேட்டுக்கொள்கின்றோம். அத்தோடு அரசாங்கத்தின்மீதான தேசிய மற்றும் சர்வதேச நம்பிக்கையை மீள உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக முன்னெடுக்குமாறும் வலியுறுத்துகின்றோம். - என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- - - - - - - - - - - - - - - -

## அவசர தேவைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தியாவசிய சேவைகளிற்கு மாத்திரம் இரண்டு வாரங்களிற்கு எரிபொருள் வழங்கப்படும் என அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பெட்ரோலிய பொருள்கள் வழங்கல் மற்றும் விநியோகிப்பது தொடர்பில் இலங்கை எதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்து இந்தச் சந்திப்பில் இலங்கை தூதுவர் எடுத்துரைத்துள்ளார் என இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. மக்கள் எதிர்கொண்டுள்ள பெரும் நெருக்கடிகள் குறித்தும் அவர் விவரித்துள்ளார்.

கடனுதவி மூலம் எரிபொருள்களைப் பெற்றுக்கொள்வதற்காக இந்தியா வழங்கிய உதவிக்காக நன்றி தெரிவித்துள்ள மிலிந்த மொராகொட தற்போது இலங்கைக்கு தேவையாக உள்ள பெட்ரோல் மற்றும் டீசலை அவசர அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து இந்திய அமைச்சருடன் பேச்சுகளை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை எதிர்கொண்டுள்ள உடனடி நெருக்கடிகளிற்கு தீர்வை காண்பதற்கு இந்தியாவும் இலங்கையும் எந்த வழிமுறைகளை பின்பற்றலாம் என்பது குறித்து இருவரும் ஆராய்ந்துள்ளனர்.

இந்தசந்திப்பின்போது பெட்ரோலிய எண்ணெய், எரிவாயு துறைகளில் இரு நாடுகளும் எவ்வாறு நீண்டகால உறவுகளைப் பேணலாம் என்பது குறித்து இரு தரப்பினரும் ஆராய்ந்துள்ளனர்.

இந்தியாவின் தற்போதைய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் போல அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியும் முன்னர் கொழும்பில் இந்தியத் தூதரகத்தில் முதல் நிலை செயலாளர் பதவியில் பணியாற்றியிருந்தார் என்பதும் -

இவரே 1987 ஜூலையில் ஹெலிக்கொப்டரில் யாழ்ப்பாணம், சுதுமலை அம்மன் கோவிலை அண்டிய வெளியில் போய் இறங்கி, அங்கிருந்து தலைவர் பிரபாகரனை பிரதமர் ராஜிவ் காந்தியுடனான பேச்சுக்கு இந்தியாவுக்கு அழைத்துச் சென்றார் என்பதும் - குறிப்பிடத்தக்கவை.

- - - - - - - - - - - - - - - -

## தன்னாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களின் இன்றைய நிலைமையை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?" - என்ற கேள்விக்கு அவர் அனுப்பி வைத்துள்ள பதிலில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை கருமாறு:-

இரண்டு நாள்களுக்கு முன்னர் சுமார் 30 வயது நிறைந்த ஒரு பெண் எமது நல்லூர் இல்ல எல்லைக்கு அண்மியதாகத் தெருவில் மயங்கி விழுந்து கிடந்தார். ஒரு வயது போன அம்மா அவரைப் பார்த்துவிட்டு பதைபதைத்து எனது பாதுகாப்பு பொலிஸ் அலுவலரிடம் முறையிட்டார். அந்த அம்மையாரும் சுற்று வட்டாரத்தில் இருந்தவர்களும் விழுந்து கிடந்தவருக்கு மூர்ச்சை தெளிவித்து தண்ணீரும் சாப்பிட உணவும் வாங்கிக் கொடுத்தார்கள். அவரை எமது இல்லத்திற்கு அழைத்து வந்து விசாரித்தோம். திருமணமானவர். கணவருக்கு ஒரு கண் தெரியாது. வேலையில்லை. ஒன்றரை வயதில் ஒரு மகன். இவர் வேலை தேடி அலைந்துள்ளார். அன்று சாப்பிடவில்லை. மயங்கி விழுந்து விட்டார். அவருக்குப் போதிய உதவிகள் செய்து நாம் அனுப்பிவிட்டோம்.

அந்த வயது போன அம்மா தன்னிடம் இருந்த ரூ.300 ரூபாவையும் குறித்த பெண்ணுக்காகச் செலவழித்தார். பாதிக்கப்பட்டவரை ஆசுவாசப்படுத்தி நீர், குளிர்பானம், உணவு கொடுக்க எம் மக்கள் முன்வந்தமை பாராட்டுக்குரியது.

ஆனால் இவ்வாறான நிலைமை வருங்காலத்தில் அதிகரிக்க இடமுண்டு. திருட்டுக்கள், கொள்ளைகள் பெருவாரியாக நடைபெற வாய்ப்பிருக்கின்றது. முக்கியமாக சைக்கிள் திருட்டுக்கள் அதிகரிப்பன. ஆகவே தற்போது நாம் வருங்காலத்தைப் பற்றித் திட்டமிட வேண்டியுள்ளது. இன்றைய நிலைக்கு யார் காரணம், அவர்களுக்கு நாம் என்ன தண்டனை வழங்க வேண்டும், எவ்வாறு இன்றைய நிதி நிலைமையைச் சீராக்கலாம் என்று சிந்திப்பதைக் காட்டிலும் இனி வருங்காலத்தில் எமது மக்கள் தமது துயர் நீக்க என்ன செய்ய வேண்டும் என்பதே இன்றைய முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

நாங்கள் இன்றைய நிலைமையை எமக்குச் சாதகமாக மாற்ற வேண்டும். எமது கட்சி 2018 இலேயே தன்னாட்சி, தற்சார்பு, தன்நிறைவு என்ற வாசகங்களைக் கட்சியின் எதிர்பார்ப்புக்களாக முதல் நிலைப்படுத்தியிருந்தது. அரசியலில் கூட்டு சமஷ்டி முறையிலான தன்னாட்சி, சமூக ரீதியாகவும் தனிநபர் ரீதியா கவும் தற்சார்பு, பொருளாதார ரீதியாக தன்நிறைவு என்பவையே எமது குறிக்கோள்களாக இருந்து வருகின்றன. அரசியலில் தன்னாட்சி பெற நாம் உழைத்துக் கொண்டே மக்களைத் தற்சார்பு நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள் என்று ஊக்கி வருகின்றோம். தற்சார்பு நடவடிக் கைகள் மூலம் இலங்கையின் தமிழகம் தன்நிறைவு காண வேண்டும் என்று கூறி வருகின்றோம். அன்று நாம் கூறியவற்றையே இன்று யாவரும் கூறிவருகின்றார்கள்.

தமிழர்களாகிய நாங்கள் வரலாற்று ரீதியான பாரம்பரியம் உடையவர்கள். 'மதியாதார் முற்றம் மதித்தொருகால் மிதியாமை கோடி பெறும்' என்றார் ஔவையார். எம்மை மதியாத சிங்கள அரசாங்கத்தை மதித்து அவர்களிடம் இருந்து உதவிகளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது காலத்தை வீணடிப்பதாகும். நாம் எம்மைப் பாதுகாத்துப் பராமரிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். மற்றவர்களிடம் கையேந்துவதை வெட்கக் கேடான செயலாகப் பார்க்கக் கற்றுக் கொள்ள வேண்டும். எனவே தான் நாம் தற்சார்பு நடவடிக்கைகளில் ஈடுபட முன்வரவேண்டும்.

எம் மீது நம்பிக்கை வைத்து எமக்குத் தேவையானவற்றை நாமே தயாரிப்பதே தற்சார்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது. புலிகள் காலத்தில் நாம் தற்சார்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தோம். போரின் பின்னர் பிச்சைப் பாத்திரம் ஏந்தப் பழகிக் கொண்டுள்ளோம். எதற்கும் மற்றவர்களை எதிர் பார்ப்பதே இன்றைய எமது கலாசாரம். அரசாங்கம் என்ன தருவார்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் என்ன தருவார்கள், கொடையாளர்கள் என்ன தருவார்கள், எமது வெளிநாட்டு உறவுகள் என்ன தருவார்கள் என்றெல்லாம் உதவிகளை எதிர்பார்த்து நிற்கின்றோம். எமது வாழ்க்கையை நாமே முன்னேற்ற நாம் என்ன செய்ய வேண்டும் என்று பொதுவாக எம்மவர்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

வட, கிழக்கு தமிழ் மக்களின் இன்றைய நிலைமை என்ன என்று கேட்டால் நாம் யாவரும் ஸ்தம்பித்து நிற்கின்றோம் என்பதுதான் இன்றைய நிலைமை. இதிலிருந்து விடுபட்டு தற்சார்பு நடவடிக்கைகளில் நாம் ஈடுபட வேண்டும். எம்மை நாடி வந்திருக்கும் இன்னல்கள் எம்மைச் சுய பலத்துடன் சிந்திக்கவும் செயலாற்றவும் உதவி புரிய வேண்டும். சேர்ந்து செயலாற்ற நாம் இனிப் பழகிக் கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு அயலவர் நால்வர் தத்தம் வாகனங்களுக்கு எரிபொருள் வாங்கித் தனித்தனியாகத் தமது வாகனங்களை ஓட்டுவதிலும் பார்க்க ஒவ்வொருவரும் வாய்ப்பெடுத்து மற்றைய மூவரையும் தமது வாகனங்களில் ஏற்றிச் செல்வது எரிபொருள் சேமிப்புக்கு உதவும். மற்றும் அயலவரிடையே அன்னியோன்யத்தையும் வளர்க்கும்.

இன்று இளைஞர், யுவதிகள் தமது காலத்தை வீணடிக்காமல் புதிய புதிய கண்டுபிடிப்புக்களை வெளிக் கொண்டு வர எத்தனிக்க வேண்டும். செயற்கை உரம் இல்லாது இயற்கை உரத்தாலேயே போதிய அறுவடையைப் பெற முடியுமா என்று சிந்திக்க வேண்டும். போக்குவரத்தை லேசாக்க என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஆராயலாம்.

'தேவைதான் கண்டுபிடிப்புக்களின் தாய்' (Necessity is the mother of invention) என்பார்கள். எமக்கு இன்று தேவைகள் பல இருக்கின்றன. அவற்றைப் பூர்த்தி செய்ய எந்தவிதமான புதிய யுக்திகளைக் கையாளலாம் என்று எம் மக்கள சிந்திக்க வேண்டும்.

சும்மா அரசாங்கத்தையும் மற்றவர்களையும் குறை கூறுவதை நிறுத்தி தற்போதைய சவால்களை நாம் எவ்வாறு முறியடிக்கலாம் என்பது பற்றி சிந்திக்க வேண்டும்.

ஆகவே இன்றைய நிலைமையை எமக்கு இறைவன் ஈந்த ஒரு வரப்பிரசாதமாகவே நான் பார்க்கின்றேன். வீட்டுத் தோட்டத்தை வளர்த்து வருகின்றோம். காரியாலய காணியில் தோட்டம் அமைத்துள்ளோம். மேலும் தோட்ட நிலமொன்றைக் குத்தகைக்கெடுத்துப் பலவித பயிர்களை அங்கு பயிரிட்டு உருவாக்கி வருகின்றோம். நாட்டின் பொருளாதார நிலைமை சீரடையப் பல மாதங்கள் ஆவன. அதற்கிடையில் பட்டினி, பஞ்சம், நோய் நொடிகள் எம்மைப் பாதிக்காத மாதிரி நாம் நடந்து கொள்ள வேண்டும். காணிகளை வெறுமனே இருக்கவிடாதீர்கள். பயிரிடுங்கள்! வங்கியில் கடன் பெற்றாவது உங்கள் தரிசு நிலங்களை வளம் கொழிக்கும் நிலங்களாக மாற்ற எத்தனியுங்கள். இன்றைய எமது நிலைமை எம்மை தன்னாட்சி, தற்சார்பு, தன்நிறைவு நடவடிக்கைகளில் ஊக்கமுடன் பயணிக்க உறுதுணையாக இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். - என்று உள்ளது.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# எதிரணியின் எதிர்ப்பு

அரசமைப்பின் 19ஆவது திருத்த ஏற்பாடுகளை மீள நடைமுறைக்குக் கொண்டு வருதல் என்ற ஒழுங்கில் ஆளும் கட்சி – அரச தரப்பு – முன்வைத்திருக்கும் யோசனைத் திட்டம் ‘அரசமைப்புக்கான 22ஆவது வரைவு’ எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, நேற்று முன்தினம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப் பட்டும் விட்டது.

அது எந்நேரமும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, நாடாளுமன்ற நிகழ்ச்சி ஒழுங்குப் பத்திரத்தில் சேர்ப்பதற்கான பதிவுக்கும் வந்து விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சிகள் – குறிப்பாக, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., மொட்டுக் கட்சியிலிருந்து பிரிந்து தனிக் குழுவாக இயங்கத் தொடங்கியிருக்கும் தரப்புகள் போன்றவை – என்ன செய்யப் போகின்றன என்பது தான் கேள்வி.

அரசமைப்புத் திருத்தம் ஒன்று நிறைவேறுவதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவு அவசியம். ஆளும் தரப்புக்கு இன்றைய நிலையில் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையான 113 எம்.பிக்களின் ஆதரவு இருக்கக் கூடும். ஆனால் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் எண்ணிக்கை என்ற 150 பேரின் ஆதரவு இல்லை. அரசுடன் முரண்பட்டு நிற்கும் தரப்புகள் கணிசமாக அரசுடன் சேர்ந்து வாக்களித்தால்தான் இந்த 22ஆவது திருத்தம் நடைமுறைக்கு வரமுடியும்.

அப்படி 22ஆவது திருத்தத்துக்கு ஆதரவு கிடைக்குமா என்பதே கேள்வி. சரியோ, பிழையோ 22ஆவது திருத்தம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கொஞ்சமேனும் குறைக்கின்றது. எதிர்பார்க்கும் அளவுக்கு அவை அமையாவிட்டாலும் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைத்தல் போன்ற சில முன்னேற்றகரமான அம்சங்கள் அதில் உண்டு. அது வந்தாலாவது நல்லது என்று நிறைவேற்றித் தானாக வேண்டும், ஆகவே அதை ஆதரிப்பதைத் தவிர எதிரணிக்கு வேறு வழியில்லை என்று சில தரப்புகள் கூறுகின்றன.

ஆனால் பிரதான எதிர்க்கட்சிகளின் எண்ணம் அப்படி இல்லை எனத் தெரிகின்றது.

இந்த நகல் வரைவின்படி ஜனாதிபதியின் அதிகாரங்கள் பல குறைக்கப்படுகின்றன. ஆனால் அவை பெரும்பாலும் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர்தான் நடைமுறைக்கு வரும் என்றே வரைவில் கூறப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி கோட்டா ராஜபக்ஷவை வீட்டுப் போகும்படி மக்கள் வற்புறுத்துகின்றார்கள். அதற்காகப் போராடுகின்றார்.

ஆனால், இந்த 22ஆவது திருத்தப்படி அவர் பதவியில் நீடிக்கப் போகின்றார். அவருக்கான அதிகாரங்களும் அவரது ஆட்சிக் காலம் முழுவதும் தொடரத்தான் போகின்றன.

அப்படியாயின் அது மக்களின் தீர்மானத்துக்கு மாறான எண்ணத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சி, அதனால் அதை ஆதரிக்க முடியாது என்கின்றன எதிர்க்கட்சிகள்.

அரசமைப்புத் திருத்தம் என்ற பெயரில் கோட்டாபய மக்களினதும் நாடாளுமன்றத்தினது காதில் பூச் சுற்றிவிட்டுப் போக அனுமதிக்க முடியாது. சரியான வடிவத்தில் – உரிய முறையில் – அமையாத 22ஆவது திருத்தத்தை நிறைவேற்ற விடோம், அதற்கு ஒத்துழைக்க மாட்டோம் என்று எதிரணிகள் முடிவு செய்யக் கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றன. ஒரு வகையில் பார்த்தால் அது சரியான முடிவுதான்.

# இந்திய அரசுக்கு வடக்கை அரசு விற்கப் போகின்றது!

## மன்னார் மாவட்ட மீனவ சங்கம் குற்றச்சாட்டு



தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் வட பகுதியை இந்திய அரசு அபிவிருத்தி செய்வதாக கூறி வடபகுதியை இந்திய அரசிற்கு விற்கப் போகிறார்கள் என மன்னார் மாவட்ட மீனவ சங்க தலைவர் மொகமட் ஆலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

நாட்டில் காணப்படுகின்ற அரசியல் நிலை இதற்கு அப்பால் எரிபொருள் தட்டுப்பாடு மீனவர்களுக்கு கிடைக்காமை தொடர்பான பிரச்சினை இதேபோல் மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட – அமைக்கப்படவுள்ள – காற்றாலை மின்சாரம் மற்றும் அதற்கு அப்பால் அதானி குரூப் எடுத்துள்ள காற்றாலை மின்சாரத் திட்டம் மற்றும் ஏனைய விடயங்கள் அத்தோடு கனியவள மண் அகழ்வு அதனோடு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சமகாலத்தில் சட்டவிரோதமாக செய்யப்படுகின்ற மீன்பிடி முறைகள் வடக்கில் உள்ள மீனவ அமைப்புகளை புதுப்பித்தல் போன்ற பல விடயங்களை நாங்கள் பேசியிருக்கிறோம்.

கடந்த வியாழக்கிழமை ஓர் இந்தியன் குழு ஒன்று மன்னார் மாவட்டத்தில் அதானி குரூப் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து சென்றிருக்கின்றது.

தற்போது இலங்கைக்கு இந்தியாவின் எரிபொருள் விநியோகம் வழங்கப்படாது. ஆனால் இந்தியா தற்போதைய நிலையில் எமக்கு உரிய உதவிகளை வழங்கத் தயாரில்லை. ஆனால் வடபகுதியில் வளங்களை பாவிப்போம் என்பது அவர்களுடைய குறிக்கோளாகக் காணப்படுகிறது.

ஆனால் தற்பொழுது இலங்கையில் உள்ள வளங்களை சரியாகப் பயன்படுத்த இலங்கை அரசுக்கு தெரியவில்லை. காலத்துக்கு ஏற்றவாறு எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு எடுக்கப்படாமையால் நாடு வறுமைக் கோட்டுக்குள் தள்ளப்பட்டிருக்கிறது,

இந்த அரசாங்கம் நாட்டை கூறு போட்டு ஒவ்வொரு பகுதியாக விற்றிருக்கின்றது. அதானி என்பவர் இந்தியாவில் பாரியபணம் படைத்த ஒரு பெரிய தொழிலதிபர். அங்கே அவருக்கு நிறைய பிரச்சினைகள். அதாவது அவரால் முன்னெடுக்கப்பட இருக்கின்ற துறைமுக நகரங்கள் கூட ஒரு பிரச்சினையாகக் காணப்படுகிறது. அவரைக் கொண்டு வந்து வடபகுதியை விற்க போகின்றார்கள். நிச்சயமாக தற்போதுள்ள சூழ்நிலையில் வட பகுதியை அபிவிருத்தி செய்வதாகக் கூறி திட்டங்களை நடைமுறைப்படுத்தி இந்தியாவுக்கு வடபகுதியைவிற்கப் போகின்றார்கள். – என்றார்.

# போதைப்பொருள் பாவனை; யாழில் விழிப்புணர்வூட்டல்



போதைப்பொருள் பாவனை தொடர்பாக விழிப்புணர்வூட்டும் வகையில் பஸ்களில் ஸ்டிக்கர்களை ஒட்டும் நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் பல்வேறுபட்ட தன்னார்வ அமைப்புக்களின் பங்கேற்புடன் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் உஜித் லியனகே உள்ளிட்ட மாவட்ட செயலக அதிகாரிகள் தன்னார்வ அமைப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

போதைப்பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உளவளதுணை, சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட 1927 என்கிற உடனடி இலவச தொலைபேசி சேவை அறிமுகப்படுத்தும் பதாகை திறந்து வைக்கப்பட்டது.

# யாழ். சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க முடிவு

யாழ்.சர்வதேச விமான நிலையத்தில் சர்வதேச செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

சர்வதேச ஒழுங்குபடுத்தல் தேவைகளை உறுதிப்படுத்திக் கொண்டு யாழ்.சர்வதேச விமான நிலையத்தின் நாடுகளுக்கு இடையிலான தொழிற்பாடுகள் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், கொரோனாத் தொற்று நிலைமையால் அதன் நடவடிக்கைகள் 2020 மார்ச் மாதம் 15 ஆம் திகதி வரை தற்காலிகமாகப் பிற்போடப்பட்டிருந்தன.

இந்த நிலையில் மேற்படி விமான நிலையத்திலிருந்து தென்னிந்திய விமான நிலையம் வரை வாடகை விமானத் தொழிற்பாடுகள் மற்றும் நேர அட்டவணைக்கமைவான விமானப்பயணங்களை மேற்கொள்வதற்காக சர்வதேச ரீதியாகவும் உள்ளூரிலும் நிறுவப்பட்டுள்ள விமான நிறுவனங்கள் தற்போது வேண்டுகோள்களைச் சமர்ப்பித்துள்ளன.

இதற்கமைய யாழ்.சர்வதேச விமான நிலையத்தின் நாடுகளுக்கு இடையிலான தொழிற்பாடுகளை எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஆரம்பித்தல் தொடர்பாக துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# சூழ்நிலைகளுக்கேற்ப மாறும் சீனாவின் நட்புறவுப் போக்கு!

## உதவிகள் வழங்குவதிலும் சந்தர்ப்பவாதம்



இலங்கை இப்போது அது எதிர்கொள்ளும் கடன் நெருக்கடிக்கு மத்தியில் ஒரு பாடத்தை உணர்ந்துள்ளது. அது, சிறந்த நோக்கத்துடன் அணுகினால் கூட, சீனா எல்லா சூழ்நிலைக்கும் பொருத்தமான நண்பனாக இருப்பது கடினம் என்பதுதான்.

வெளிநாட்டு உதவிகளை அதிகம் பெறுவதற்காக சீனா, இந்தியா மற்றும் ஜப்பானை நன்கொடையாளர் மாநாட்டிற்கு அழைக்கப் போவதாக இலங்கை கடந்த புதனன்று அறிவித்தது.

இந்தியப் பெருங்கடல் தீவு நாடான இலங்கை, தனது அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்பு மற்றும் வெளிநாட்டுக் கடனைச் சமாளிக்கும் திட்டங்களைச் சமாளிக்கும் வரை அதன் திவாலான பொருளாதாரத்தை மிதக்க வைப்பதற்கு, சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட தனக்குக் கடனளிக்கும் நாடுகள் உதவும் என்று எதிர்பார்ப்பதாகச் சில வாரங்களுக்கு முன்னர் கூறியது.

ஆனால், 'எல்லா சூழ்நிலைகளிலும் நண்பன் என்ற முறையில், சுதந்திரத்திற்குப் பின் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள இந்த மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சீனா இன்னும் பலவற்றைச் செய்யும் மற்றும் செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்புகள் நிச்சயமாக அதிகமாகவே இருந்தன. ஆனால் நடக்கவில்லை.

ஒரு வேளை அதன் சொந்த கொவிட் தாக்கத்தினால் ஏற்பட்ட மந்தநிலை காரணமாக, இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு சீனாவின் உதவிகள் – பிரதிபலிப்புகள் – மிகக் குறைவாகவே உள்ளன.


கடந்த மாதம், பெய்ஜிங் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு சில நூறு மில்லியன் டொலர்களை கடனாக வழங்க முன்வந்தது. ஆனால் அந்தத் தொகையானது இலங்கையின் அடிப்படை இறக்குமதிகளை ஈடுகட்ட ஒவ்வொரு மாதமும் தேவைப்படும் 50 கோடி அமெரிக்க டொலர் அந்நிய செலாவணியை விட மிகக் குறைவு என்று இலங்கையின் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை நல்ல காலத்தில் இருந்தபோது, இலங்கைக்கு பெருமளவிலான உள்கட்டமைப்புக் கடன்களை வாரி வழங்கிய பெய்ஜிங், இப்போது இலங்கைத் தீவு பெரும் நெருக்கடியில் சிக்கியிருக்கும் போது உதவ முன்வராமல் அசாதாரண அமைதி பேணுகிறது.





இதன் மூலம் அதன் பகட்டுப் போக்கு வெளிப்படையாயிருக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கு இது வழிவகுத்துள்ளது.



"தென்கிழக்கு ஆசியா மற்றும் ஆபிரிக்காவை நோக்கி சீனா இப்போது கவனம் செலுத்துவதாகத் தெரிகிறது, தெற்காசிய நாடுகள் முன்பு இருந்த அதே கவனத்தைத் தற்சமயம் சீனாவிடம் பெறவில்லை" – என்று இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்த மாத தொடக்கத்தில் கூறியிருந்தார்.

இலங்கைக்கு 'எல்லா சூழ்நிலைகளிலும் நண்பன்' ஆக இருந்த சீனா இப்போது வெகு தொலைவில் போய் 'நல்ல கால வேளையில் மட்டும் நண்பன்' என்ற மாற்றாக மாறிவிட்டது என்று அவர் பரிந்துரைப்பது போல் உள்ளது.

இருதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் உடனடியாக கையெழுத்திடுவதுதான் தொடர்ச்சியான உதவிகளுக்கு வழி என்ற சாரப்பட நிபந்தனை விதித்து ஏப்ரல் மாதம் சீனப் பிரதமர் லீ கெகியாங் கூறிய கருத்துக்கள் இலங்கையைப் பொறுத்தவரை அதற்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை.

இருதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுகளை முன்கூட்டியே தொடங்குவதற்கான அவரது இந்த அழைப்பு – சீனாவின் போக்கு குறைந்த பட்சம் இலங்கையில் பரவலாக விமர்சிக்கப்பட்டதுடன் அதிர்ச்சியுடனும் நோக்கப்பட்டது.

காலம், சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும், நாடுகளிடையேயான நட்பு எவ்வளவு உறுதியானதாக இருந்தாலும், ஒரு நாடு மற்றவரின் நலன்களைத் தொடர்ந்து கவனிக்கும் என்று நம்புவது அப்பாவித்தனம் தான்.

இலங்கையைத் தவிர, பாகிஸ்தானுடன் சேர்த்து ஸாம்பியா, சிம்பாப்வே மற்றும் நமீபியா போன்ற ஆபிரிக்க நாடுகளும் சீனாவின் எல்லா சூழ்நிலைகளிலும் நண்பன்' என்று விவரிக்கப்பட்டு வந்துள்ளது.

ஆனால் சீனாவின் இருதரப்பு உறவுகளை 'மலைகளை விட உயர்ந்தது மற்றும் கடல்களை விட ஆழமானது' என்றோ அல்லது எகு விட வலிமையானது மற்றும் தேனை விட இனிமையானது என்றோ விவரிக்கும் வெளிப்பாடுகளுடன் கூடிய இந்த வாசகங்களுக்கு இனி ஓய்வு கொடுக்க வேண்டியதுதான்.

இத்தகைய வாசகங்கள் அதிகப்படியாக அல்லது நம்பத் தகாதனவாகா ஒலிப்பதைத் தவிர, வேறில்லை. இந்த வெளிப்பாடுகள் சர்வதேச உறவுகளின் உண்மையைப் புறக்கணிக்கின்றன. அதாவது நிரந்தர நண்பர்கள் அல்லது எதிரிகள் இல்லை; நிரந்தர நலன்கள் மட்டுமே உள்ளன. அதுதான் உண்மை.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவை(இந்த நாடுகள் எல்லாம்), சீனாவை அதிகமாக வாக்குறுதியளித்து, குறைவாக வழங்கியுள்ள ஒரு நாடாகச் சித்திரிக்கின்றனர்.

ஆனால், இந்தியா கடந்த சில மாதங்களாக 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான உதவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது. அதே நேரத்தில் அதன் நாணய பரிமாற்றங்கள், கடன் ஒத்திவைப்புகள் மற்றும் அத்தியாவசியங்களுக்கான கடன்கள் ஆகியவை மூலம் தீவு தேசம் தாங்கி, நிமிர்ந்து நிற்பதற்கு இந்தியா பக்கத் துணையாக நிற்கிறது.

கொழும்புடனான தன் உறவுகளைப் பொறுத்தவரை, புதுடெல்லி எப்போதும் நம்பகமான பங்காளியாகவும் நம்பகமான நண்பராகவும் இருக்கும் என்பதை உறுதிப்படுத்தி அதில் தெளிவாக உள்ளது.

**(மூலம்: 'சௌத் சைனா மோர்னிங் போஸ்ட்')**

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி அரசுக்கெதிராக வவுனியாவில் 25 ஆயிரம் பேரிடம் கையெழுத்து வேட்டை!

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஏற்பாடு

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணக் கோரியும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகவும் 25 ஆயிரம் பேரின் கையெழுத்து பெறும் நடவடிக்கை வவுனியாவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பைச் சேர்ந்த க.அருந்தவராசா (மேழிக்குமரன்) தெரிவித்தார்.

வவுனியா ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி முழு நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள போதும் வவுனியா மாவட்டம் விவசாயத்தை அடிப்படையாக கொண்ட மாவட்டம் என்ற அடிப்படையில் கடுமையாக பாதிப்படைந்துள்ளது. இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை சேதன பசளையூடாக மாற்றத்தை ஏற்படுத்த முடியும் எனக் கூறி ஒட்டுமொத்தமாக உரங்களை நிறுத்தி வைத்திருந்து, விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. தொடர்ந்து வரியைக் குறைக்கின்றோம் எனக் கூறி முன்னெடுத்த நடவடிக்கை திறைசேரியில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இன்று ஒட்டுமொத்த இலங்கை மக்களும் பாதிப்படைந்துள்ளார்கள். வவுனியாவில் கல்வி சமூகமும் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது. ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு எமது மாணவர்களின் எதிர்காலம் மிகவும் பாதிப்படைந்துள்ளது.

விவசாயிகள் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வைத்தியசாலைகளில் முக்கிய மருந்துகள் இல்லாமையால் நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவற்றுடன் எரிவாயு, எரிபொருள், மின்சாரம் தொடர்பில் மக்கள் மிகப் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். எங்கும் ஒரே வரிசைகளாக காணப்படுகின்றது. தற்போது எரிபொருள், எரிவாயு என்பன நிறுத்தப்பட்ட நிலை காணப்படுகின்றது. 10 வீதமான உணவுப் பொருள்களின் விலை மீள அதிகரிக்கப்பட்டுள்ளது. பெற்றோலின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது. இது ஒரு மோசமான நிலைமைக்கு இலங்கையை கொண்டு செல்லப் போகிறது. பட்டினிச் சாவை எமது சமூகம் எதிர்நோக்கியுள்ள துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மக்கள் ஏதாவது பெறுவதற்கு நாம் ஆவண செய்ய வேண்டும். எமது வவுனியா மாவட்டத்தில் உள்ள 25 ஆயிரம் மக்களை இலக்காக கொண்டு அவர்களின் எதிர்ப்பை பொருளாதார நெருக்கடிக்கு எதிராக அணிதிரளச் செய்து கையெழுத்து வாங்கும் நடவடிக்கையைநாம்மேற்கொள்ள இருக்கின்றோம். இன்று (புதன்கிழமை) காலை 10 மணிக்கு வவுனியா இலுப்பையடியில் அந்த நிகழ்வு ஆரம்பமாகும்.

நாங்கள் வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும், 20 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்களையும் தனித் தனியாக சந்தித்து அவர்களின் ஆதரவைக் கோரி வருகின்றோம். நாங்கள் எல்லோரும் இணைந்து 25 ஆயிரம் பேரிடம் கையெழுத்தை வாக்குகின்ற போது கிராமங்கள், நகரங்கள் தோறும் சென்று வாங்கவுள்ளோம். அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்களிடமும் கையெழுத்தை வாங்கித் தருமாறு கோரியுள்ளோம். மக்களுடைய ஒட்டுமொத்த எதிர்ப்பை வவுனியாவில் இருந்து நாங்கள் காட்ட வேண்டும். இதற்கு அரசு ஆவண செய்ய வேண்டும் என்பது எமது கோரிக்கை.

இந்த மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ள நிலையில் சாதாரண தொழிலாளர்கள் வாழ்க்கையைக்




கொண்டு நடத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதில் இருந்து எல்லோரையும் காப்பாற்றும் வகையில் சமுதாய பண்ணை என்ற அடிப்படையில் 5, 6 பேரை சேர்த்து வீட்டுத் தோட்டங்களை உருவாக்கி நடத்தவுள்ளோம். இதில் அனைத்து கட்சிகள் மற்றும் அனைத்து தரப்பினரையும் இணைத்து முன்னெடுக்கவுள்ளோம். 25 ஆயிரம் பேரை நோக்கிய எமது இலக்கு முடிவடைந்து பின்னர் எமது வவுனியா மாவட்ட அரச அதிபர் ஊடாக அரசுக்கு வழங்குவதற்கும், இலங்கை தூதரகங்கள் ஊடாக வெளிநாடுகளுக்கும், ஐ.நாவுக்கும் வழங்கவுள்ளோம். இணைந்து செயற்படும் அரசியல் கட்சிகள், அமைப்புக்களின் கடிதங்களையும் பெற்று வழங்கவுள்ளோம். இதற்கு வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களினதும் ஆதரவைக் கோரி நிற்கின்றோம் எனத் தெரிவித்தார்.

# ஜப்பானின் உதவிக்கான ஒப்பந்தம் கண்ணிவெடி அகற்றும் பணிக்காக!





டாஸ் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணிக்கான அடுத்த ஓராண்டுக்கான ஜப்பான் நாட்டு உதவிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 8.30 மணியளவில் முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெறும் பகுதியில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஜப்பான் நாட்டின் தூதுவர் மிசுகோஸி கிடேகி இந்த நிகழ்வில் கலந்துகொண்டு, நன்கொடையாளர் சார்பில் ஒப்பமிட்டார். அவருடன் ஜப்பான் தூதரகத்தின் 2 ஆம் நிலை செயலாளர் இகராசி டோருவும் ஒப்பமிட்டார்.

டாஸ் நிறுவனத்தின் சார்பாக இயக்குநரும் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளருமான ஆனந்த சந்ரசிறி மற்றும் செயற்திட்ட முகாமையாளர் சுனில் ஆரியசேன ஆகியோரும் ஒப்பமிட்டனர்.

மேற்படி பணியை முன்னெடுக்க 681, 812 அமெரிக்க டொலருக்கான மானிய ஒப்பந்தமே இதன் போது கையொப்பமிடப்பட்டது.

டாஸ் நிறுவனத்திற்கு 19.06.2022 வரை அனைத்து நன்கொடையாளர்களின் நிதி உதவியுடன் 15.82 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடி அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 106,304 மனிதருக்கு தீங்கேற்படுத்தும் கண்ணிவெடிகளும், 245 கனரக வாகனங்களுக்தெதிரான கண்ணிவெடிகளும், 26,019 வெடிக்கும் நிலையில் உள்ள எச்சங்களும், 164,115 சிறிய ஆயுத வெடிமருந்துகளும் கண்டு அழிக்கப்பட்டுள்ளன என அந்த நிறுவனம் தெளிவுபடுத்தியுள்ளது.

ஜப்பான் நாட்டின் 13 ஆவது வருடமாக டாஸ் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு ஜப்பான் அரசாங்கத்தால் நிதி உதவி வழங்கப்படுகின்றது. ஜப்பான் நாட்டின் நிதி உதவியால் மாத்திரம் 6.4 சதுர கிலோமீற்றர் பரப்பு கண்ணிவெடி அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மிகுதி பணிக்கான அடுத்த ஆண்டு நிதி உதவிக்கான ஒப்பந்தமே நேற்று இரு தரப்பாலும் கையொப்பமிடப்பட்டது.

தொடர்ந்து மனித நேய பணியில் ஈடுபடும் குழுவினருடன் படம் எடுக்கப்பட்டமையுடன், செயற்பாடுகள் தொடர்பில் தூதுவர் மற்றும் தூதரக அதிகாரிகளிற்கு விளக்கமளிக்கப்பட்டது.

பின்னர் களப்பணிகளை குழுவினர் பார்வையிட்டமையுடன், அகற்றப்பட்ட வெடிபொருள்களின் மாதிரிகளையும் அவர்கள் பார்வையிட்டனர்.

# மக்கள் காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்ட முஷாரப் உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்குதல்

(நூருல் ஹுதா உமர்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ். எஸ். எம். முஷாரப் தன்னை கட்சியிலிருந்து நீக்கியமை இயற்கை நீதிக்கு முரணானது என்ற அடிப்படையில் அந்தக் கட்சியின் தீர்மானத்துக்கு எதிராகக் கடந்த திங்கட்கிழமை உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சார்பாக சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா ஆஜராகியிருந்தார். கடந்த மே மாதம் 31ஆம் திகதி நடைபெற்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக நடத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையின் அடிப்படையில் கட்சியின் யாப்புக்கு எதிராகவும் அதன் தீர்மானங்களுக்கு எதிராகவும் நாடாளுமன்ற உறுப்பினர் செயற்பட்டார் என்று தெரிவித்து கட்சியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார். மக்கள் காங்கிரஸ் கட்சி மேற்படி நாடாளுமன்ற உறுப்பினரைக் கட்சியிலிருந்து நீக்கியமை தொடர்பாக இம் மாதம் முதலாம் திகதி நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் அறிவித்திருந்தது.

மேற்படி ஒழுக்காற்று விசாரணை கட்சியின் பிரதித் தலைவர் சட்டத்தரணி என்.எம். ஷஹீட் தலைமையில் இடம்பெற்றிருந்தது. 20 இற்கு ஆதரவளித்த மக்கள் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அலி சப்றி ரஹீம் மற்றும் இஷாக் ஏ. ரஹ்மான் போன்றவர்களுக்கு எதிராகவும் ஒழுக்காற்று விசாரணைக்கான அழைப்பு கட்சியால் விடுக்கப்பட்டிருந்த போதிலும் இது வரையில் அவர்கள் மீதான எந்தவிதமான நடவடிக்கையையும் மக்கள் காங்கிரஸ் எடுக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் தரப்பிலிருந்து கூறப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# கோட்டா ஜனாதிபதி பதவியில் நீடிக்கும் வரை எந்த நாடும் இலங்கைக்கு உதவ முன்வராது!

## லக்ஷ்மன் கிரியெல்ல இடித்துரைப்பு



நாடு அறிவிக்கப்படாத முடக்கல்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டுள்ளன. மருந்துப்பொருள்களிற்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. அரச சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ள அவர், கட்டுப்பாடுகள் இல்லாததால் அத்தியாவசியப்பொருள்கள் பல பகுதிகளில் நினைத்த விலைக்கு விற்கப்படுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் பதவி விலகி மக்களின் புதிய ஆணையைப் பெறுவதற்காக தேர்தலை நடத்தவேண்டும் எனத் தெரிவித்துள்ள அவர், ஜனாதிபதி பதவியில் கோட்டாபய ராஜபக்ஷ நீடிக்கும் வரை எந்த நாடும் இலங்கைக்கு உதவிவழங்காது எனவும் தெரிவித்துள்ளார்.

# ஆசிரியைகளின் இடமாற்றம்; இடைக்கால தடை விதிப்பு!

## கல்முனை மேல் நீதிமன்றம் அதிரடி

கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் கல்முனை கல்வி வலயத்தில் கடமை புரியும் 07 ஆசிரியைகளுக்கு வேறு வலயங்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்துக்கு கல்முனை மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரசமைப்பின் உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உறுதிகேள் எழுத்தாணை மனு கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி றொக்சி முன்னிலையில் கடந்த 24 ஆம் திகதி ஆதரிப்பதற்காக அழைக்கப்பட்டது.

மேற்படி வழக்கில் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி பிள்ளைநாயகம், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜெ.அருளானந்தம் மற்றும் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டிருந்தனர்.

மனுதாரர்கள் தரப்பு வாதங்களைக் கேட்டறிந்த மேல்நீதிமன்ற நீதிபதி மேற்படி வழக்கை மீண்டும் கடந்த திங்கட்கிழமை அழைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த எழுத்தாணை மனு மீண்டும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை ஆதரிப்பதற்காக அழைக்கப்பட்டபோது மனுதாரர்கள் சார்பாகத் தோன்றிய சட்டத்தரணிகள் கிழக்கு மாகாண அரசசேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் பிரிவு 185 இன் கீழ் அங்கீகரிக்கப்படாத ஓர் இடமாற்றத்தை மனுதாரர்களுக்கு வழங்கியமை நியாயமற்றதும் சட்டமுரணானதுமாகும் என நீண்ட சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

மேற்படி சமர்ப்பணங்களின் மீது திருப்தியுற்ற மேல் நீதிமன்ற நீதிபதி மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்துக்கு இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளதோடு எதிர்வரும் முதலாம் திகதி மன்றில் தோன்ற பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்புமாறு கட்டளை பிறப்பித்தார்.

வழக்கில் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி எம்.எம். நூர்ஜஹானின் அறிவுறுத்தலில் சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன், சட்டத்தரணி காலித் முஹைமீன் மற்றும் சட்டத்தரணி முபாறக் அஸ்ஸம் ஆகியோர் தோன்றியிருந்தனர்.

### நுவரெலியாவில் தூரப்பகுதிகளுக்கும் முறையாக சமையல் எரிவாயுவை விநியோகம் செய்யவும்!

## இராதாகிருஷ்ணன் கோரிக்கை



நுவரெலியா மாவட்டத்தில் தூர பகுதிகளுக்கும் முறையாக சமையல் எரிவாயுவை விநியோகிக்குமாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

கொட்டகலை நகர பகுதிக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) பயணம் மேற்கொண்டிருந்த இராதாகிருஷ்ணன், அங்குள்ள 'லாப் கேஸ்' – முகவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

சமையல் எரிவாயுவை முறையாக விநியோகிப்பதில் உள்ள நெருக்கடி நிலை தொடர்பாகக் கேட்டறிந்த அவர், மக்கள் தரப்பில் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் பற்றியும் சுட்டிக்காட்டினார்.

நகர் பகுதிகளுக்கு நெருக்கடிக்கு மத்தியில் எரிவாயு விநியோகிக்கப்பட்டாலும், தூர இடங்களில் உள்ள தோட்ட பகுதிகளுக்கு வருவதில்லை, எனவே, இதற்கான நடவடிக்கையை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இதன்போது மலையக தொழிலாளர் முன்னணியின் நிதி செயலாளர் புஷ்பா விஸ்வநாதன் மற்றும் உறுப்பினர்களும், அதிகாரிகளும் உடனிருந்தனர்.

### 'வெண்மயில் வாகனனே கதிர்வேலா' பக்திப்பாடல் இறுவெட்டு வெளியீடு



'வெண்மயில் வாகனனே கதிர்வேலா' என்ற பக்தி பாடல்கள் அடங்கிய இறுவெட்டு வெளியீட்டு விழா அண்மையில் சுவிட்ஸர்லாந்து செம்மாக்கிறேத்தன் ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் நடைபெற்றது.

இந்த இறுவெட்டை சுவிட்ஸர்லாந்தில் வாழும் மூத்த ஊடகவியலாளர் ஞானசுந்தரம் குகநாதன் பெற்றுக் கொண்டார்.

ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் மகிமையை எடுத்தியம்பும் பாடல்களை இன்பம் அருளையா, பண்டிதர் ச.வே.பஞ்சாச்சாரம், அருள்யோகா ஆகியோர் இயற்றி இருந்தனர்.

இந்த இறுவெட்டில் உள்ள எட்டுப்பாடல்களில் நான்கு பாடல்களை செல்வி அர்ச்சனா அற்புதராசா பாடியிருந்தார்.

அஜிதா விஜயகுமார், அமிர்தசிந்துசன், மதுசிகன், மதுஸ்ரீ ஆதித்தன் ஆகியோர் தலா ஒவ்வொரு பாடல்களையும் பாடியிருந்தனர்.

முகிலரசன், பிரியன் தம்பிராசா ஆகியோரின் இசையமைப்பில் இந்த பாடல்கள் வெளிவந்துள்ளன.

ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலய தலைவர் வே. கணேசகுமார், பொருளாளர் அற்புதராசா ஆகியோர் இறுவெட்டை வெளியிட்டு வைத்தனர்.

இந்த ஆலயத்தின் மகிமையை வெளிப்படுத்தும் பாடல்கள் அடங்கிய இறுவெட்டை அர்ச்சனா அற்புதராசா பாடி வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த முடிவு!

இலங்கையில் நீதிமன்றத்தை அவமதித்தல் குற்றம், பொருள்கோடல் செய்யப்படாமை போன்ற வழக்குகளை விசாரணை செய்வதற்கும் மற்றும் தீர்மானங்களை எடுப்பதற்கும் தெளிவானதும் ஒரே விதமானதுமான நடைமுறையொன்று தற்போது பின்பற்றப்படுவதில்லை.

அதனால் நீதி வழங்கும் செயன்முறையில் தலையீடும் மட்டுப்பாடுகள் மற்றும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தின் கீழ் காணப்படும் மட்டுப்பாடுகள் தொடர்பாகப் புரிந்து கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன.

அதேபோல், நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பாக அண்மைக் காலத்தில் மோசமாக விமர்சனத்திற்குள்ளாகிய வழக்குகள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளும் போது அதுதொடர்பான சட்டத்தை மீண்டும் கவனத்திலெடுத்தல் உகந்ததென கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, பொருத்தமான சட்டத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் அதுபற்றிய விடயங்களை ஆராய்ந்து இலங்கை நீதிச் சேவைகள் ஆணைக்குழுவால் அடிப்படைச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அடிப்படைச் சட்டமூலத்திற்கமைய சட்டமொன்றை வகுப்பதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# பிராந்திய சுகாதார பணிப்பாளர் மீது தாக்குதல் சந்தேகநபருக்கு 14 நாள்கள் விளக்கமறியல்!

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்த சந்தேகநபரை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் சுகாதாரத் துறை உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள்கள் கடந்த 23 ஆம் திகதி கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் நபரொருவரால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மேற்படி சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டமையுடன் தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டமையையடுத்து 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அதாவது அரச கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் அரச அதிகாரி ஒருவரை தாக்க முற்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டு இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற வைத்தியர் பற்றாக்குறை மற்றும் ஏனைய பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் தங்களுடைய அயராத சேவைகளை ஆற்றி வரும் சுகாதாரத்துறையினர் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும் குழுவினரும் பதுக்கல் வியாபாரிகளும் இவ்வாறான அதிகாரிகளுக்கு இடையூறு விளைவித்து அவர்கள் எரிபொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாதவாறு அவர்களது கடமைகளும் செல்வதற்குரிய எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு இடையூறுகளை விளைவித்து வருகின்ற இந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-49

### இணக்கத்தின் விளைவுகள்

இனஉறவுகளில் இவ்வளவு காலமும் வந்த விரிசல்களுக்குப் பிறகும் ஆயுதப் போராட்டம், தீவிரவாதமாக ஒடுக்கப்பட்டு விட்டதால், பெரும்பான்மை மக்கள் தமிழ் மக்களுக்கு நேசக்கரம் நீட்டி, இணக்கத்திற்குப் போக வேண்டும் என சர்வதேசம் பல தடவைகள் தொடர்ந்தும் நிர்ப்பந்தித்தது. ஆயினும் அதிகாரம் கொண்டிருந்த பெரும்பான்மையின மக்கள் தங்களது பௌத்த, சிங்களப் மேலாதிக்கத்தைக் கைவிடுபவர்களாக இல்லை.

போரில் நிர்க்கதி அடைந்த தமிழ் மக்கள் உணவிற்கும் வாழ்வாதாரத்திற்கும் ஏங்கி நிற்க, அவர்களின் பெரும் பகுதியினரை முகாம்களில் அடைத்து விட்டு பேரினவாதம் வெற்றிக் கொண்டாட்டங்களிலும் அந்த கொண்டாட்டங்களுக்கு விடுமுறைகள் தந்தும் அதனை பேரினவாதத்தின் தீபாவளியாக்கினர்.

பேரினவாதத்தின் குறிக்கோளுக்கு ஏற்றவாறு போரில் பெற்ற வெற்றியின் அடிப்படையில் அதனை முற்றும் முழுவதுமாகக் கொள்ள வேண்டும் எனக் கருதி கோட்டாபயவை ஜனாதிபதியாக மிகப்பெரிய பெரும்பான்மை வாக்குகளால் சிங்கள மக்கள் தேர்ந்தெடுத்தார்கள். இவ்வளவு பெரும்பான்மை சிங்கள மக்கள் அவர்களது வாக்குகளால் கோட்டாபயவையும் ராஜபக்ஷக்களையும் தேர்ந்தெடுப்பதற்கு அவர்களது ஊழல் நிறைந்த அரசை அறியாதவர்கள் அல்லர். ஆனால் ஊற்றப்பட்ட இனவாதத்தை அதன் அதிகாரங்களில் அவர்களுக்கு இருந்த ருசிக்காக ஊற்றி ஊற்றிக் குடித்தார்கள்.

நாட்டின் ஏற்பட்ட வங்குரோத்து நிலையினால் காலிமுகத்துடலில் இளைய சமுதாயத்தினால் சில தார்மீகங்கள் தெரிவிக்கப்படுகின்றன, அவை ஒப்புக்காக இல்லாமல் உணர்வுகளில் இருந்து வந்தாலும், இனப் பிரச்சனைகளின் மூலங்களையோ அல்லது அவற்றின் அடித்தளங்களையோ நாடாமல் வெறும்



குறியீடுகளாகத் தரப்படும் தீர்வுகள் பேரினவாதத்தின் இன்னுமொரு சாயலே ஒழிய, இனப்பிரச்சினை என்ற நோய் தீர்க்கும் மூலிகை இல்லை.

ஆக பேரினவாதத்தில் ஆளப் பதிந்த சந்ததியினரும், இப்போது உருவாகும் இளைய சந்ததியினரும் கூட தமிழினத்தின் தனித்துவத்தையும் அதிலிருந்து எழுகின்ற உரிமைகளையும் தவிர்த்து, கடந்து போகவே விரும்புகின்ற நிலையில், மேலும் தொடர்ந்து பேசி இணக்கப்பாடுகளுக்கு வரலாம் என்ற வெற்று பேச்சுகளுடன் கானல் நீரைத் தேடி நடக்கும் பாதைகள் எவ்வளவு யதார்த்தமானவை மட்டுமல்லபிரயோசனமானவையும்கூட?

### புலம்பெயரின் முன்னெடுப்புகள்

இப்படியான இணக்கங்கள் எத்தனைக்குத் தமிழ் மக்கள் ஒப்புதல் தந்தார்கள்? அவற்றில் ஏதாவது ஒன்று அமுல் செய்யப்பட்டதா? அந்த நிலையில் மேலும் பேச விரும்பும் பகுதிகள் பேசிக் கொண்டிருப்பதில் அரசியலுக்காக குளிர் காய்வதைத் தவிர, ஏற்படக் கூடிய இணக்கங்கள் நடைமுறைப்படுத்துவதற்கான உத்தரவாதங்களைத் தன்னும் பெற முடியுமா? திரும்பவும் ஏமாற்றிவிட்டார்கள் என்ற பழமையான பல்லவியைத் தானே பாட முடியும்?

நாட்டில் உள்ள அரசியல் வழிகள் இப்படியான முட்டைகளில் இருந்து விடுபட முடியாமல் இருக்க, புலம்பெயர் அமைப்புகள் தரும் பாதைகளோ அழும் குழந்தைக்கு நிலவைப் பிடித்து தருவேன் என்று கூறி உணவு தரும் தாயின் நிலையில்தான் இருக்கிறது. அவர்களில் பல அமைப்புகள் தமிழ் மக்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆக்கபூர்வமான சிந்தனை இல்லை என்றும், அவர்கள் அரசியல் விடுதலையை விரும்பாதவர்கள் எனவும் அவர்கள் கோருகின்ற சமஷ்டி தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு அல்ல, இது 13ஆம் திருத்தம் போன்ற அணுகுமுறையே, ஆதலால் சமஷ்டிக்கு மேலாகப் போக வேண்டும் என்ற கோங்களை முன்வைக்கிறார்கள்.

அவர்கள் நம்பிக்கை வைக்கும் நாட்டில் உள்ளோர் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவின் மத்தியஸ்தத்துக்கு அறைகூவல் விட வேண்டும் எனவும், இன்னும் ஒரு குழப்பமான நிலையில் தமிழ் மக்களுக்கு அமெரிக்க மத்தியஸ்தம் அல்லது பொது வாக்கெடுப்



புத்தான் தேவை என்கிறார்கள். இவர்கள் ஒரு படி மேலே போய், தமிழ் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதிகள் புலம்பெயர் தமிழர்களைப் பின்பற்ற வேண்டும் என விரும்புகிறார்கள். ஏனெனில் அவர்கள் (புலம்பெயர் தமிழர்கள்) நன்கு படித்தவர்கள், புத்திசாலிகள், பணக்காரர்கள், அவர்கள் சுதந்திரமாக சிந்திக்கவும் முடியும், அதனால் பல புதிய இறையாண்மை நாடுகளின் கடந்த கால வரலாறுகளின் அடிப்படையில் நடைமுறைத் தீர்வுகளை அவர்களால் புரிந்து பரிந்துரைக்க முடியும் என இவர்கள் நம்பிக்கை வைக்கிறார்கள்.

இந்திய ஒப்பந்தம் ஆக்கப்பட்ட பின்னும், அதனை தொடர்ந்த வரலாறுகளிலும், புலம்பெயரில் நன்கு படித்தவர்கள் புத்திசாலிகள், பணக்காரர்கள் இருந்தார்கள். பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும் சுற்றியும் பலர் இருந்தார்கள். பின்னர் நோர்வே சமாதான காலங்களிலும், அதன் முறிவுக்குக் காரணகர்த்தாக்களாக அறிந்தோ அறியாமலோ அவர்களே இருந்தார்கள்.

போர்முடிந்தநாள்களில்லட்சியங்கள் மாறாது, ஆனால் பாதைகள் மாறலாம், சர்வதேசத்துடன் இணைந்து ராஜதந்திர ரீதியில் லட்சியங்களை வென்றெடுப்போம் என்று பயணித்தார்கள். இன்றும் 13 வருடங்களின் பின்பும் பயணித்துக் கொண்டே இருக்கிறார்கள். சர்வதேசத்துடன் அவர்களது பாதை (Road Map) ஐ.நாவின் கட்டமைப்புகள் ஊடாகத்தான் இருக்க முடியும். ஆனால், தமிழ் மக்கள் ஐ.நாவில் அங்கம் வகிப்பவர்கள் அல்லர். ஸ்ரீலங்கா இறைமையுள்ள நாடாக ஐ.நாவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆதலால் அங்கத்துவ நாடுகளுக்கு தரப்பட்டுள்ள உரிமைகளை அது பாவிக்கும். புவியியல், அரசியல் மாற்றங்களால் ஸ்ரீலங்காவுக்கு எதிராக, தமிழ் மக்களுக்காக சில நேச நாடுகள் கரிசனை காட்டுமே ஒழிய, பிராந்திய அணுகுமுறைகளை அவை மீறமாட்டா.

ஆக, எவ்விதத்தில் கூட்டிக் கழித்துப் பார்த்தாலும், படிக்காத மேதைகள் தங்களது விசுவாசங்களில் ஐ.நா. முன்றிலில் நின்று கோங்கள் போட்டாலும், படித்தவர்கள் சமர்ப்பணங்கள், ஆய்வுகள் என்பவற்றை ஐ.நாவுக்குத் தந்தாலும் புதிய அரசியல் சூழ்நிலைகளால் ஐ.நாவின் அங்கத்துவ நாடுகள் சுயநிர்ணய உரிமைக்கும் அதற்கான வாக்குக்கும் அதிகாரம் அளிக்காத வகையில் அவை நடக்கப்போவதில்லை. ஆனால், அவற்றுக்கு எவ்வளவு காலம் எடுக்கும் என இந்த பாதையில் பயணிப்பவர்கள் எடுத்துக் கூறுவதும் இல்லை.

சுயநிர்ணயங்களுக்கு அங்கத்துவ நாடுகள் ஆதரவு தர தன்னலங்களில் எழும் அரசியலும் பொருளாதார லாபங்களும் அவர்களை ஊக்குவிக்கும்.



# பலம்வாய்ந்துள்ள நாடுகளின் ஆக்கிரமிப்புக்களுக்கு நாட்டின் நெருக்கடி சாதகமாக அமையக் கூடாது!

## விமல் வீரவன்ஸ எச்சரிக்கை



ஜனாதிபதியை பெயரளவிலான நிர்வாகியாக்கி சர்வ கட்சி அரசாங்கத்தின் ஊடாகப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண சகல தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நெருக்கடிகளின் அறிவிப்பாளரைப் போல் செயற்படுகிறார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி பலம்வாய்ந்த நாடுகளின் ஆக்கிரமிப்பிற்கு சாதகமாக அமையக் கூடாது என தேசிய சுதந்திர முன்னணியின்தலைவர், நாடாளுமன்றஉறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் 27 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாட்டில் மிக மோசமான முறையில் தீவிரமடைந்துள்ள எரிபொருள் நெருக்கடி நாட்டு மக்களை முழுமையாக வீதிக்கிறக்கியுள்ளது.

பொருளாதார நெருக்கடி எவ்வகையில் தாக்கத்தை ஏற்படுத்தும், தாக்கங்களுக்கான தீர்வு என்னவென்பது தொடர்பில் கடந்த அரசாங்கத்திடம் பலமுறை யோசனைகளை முன்வைத்தோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் எம்மை அலட்சியப்படுத்தும் நோக்கில் முன்வைத்த யோசனைகளை செயற்படுத்தவில்லை. அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகள் இன்று முழு நாட்டையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளன.

தீவிரமடைந்துள்ள நெருக்கடிக்கு பொதுவான அடிப்படையில் தீர்வு காணும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது. தேசிய மட்டத்திலான நெருக்கடிகளைப் பிற நாட்டவர்களுக்கு சாதகமாக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுவது அவதானத்துக்குரியது.

எரிபொருள் விநியோக கட்டமைப்பின் பொறுப்பை தனியார் நிறுவனங்களுக்கு கையளிப்பது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என வலுசக்தி அமைச்சர் குறிப்பிட்டுள்ளமை பாரதூரமானது. எரிபொருள் விநியோகத்தில் இருந்து அரசாங்கம் முழுமையாக விலகினால் அது மாறுபட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

நாட்டின் எரிவாயு விநியோக கட்டமைப்பு அரசாங்கத்திடம் முழுமையாகக் காணப்பட வேண்டும் என முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க முன்னெடுத்த முயற்சிகள் தோல்வியடையவில்லை. அவரின் தூரநோக்கு சிந்தனைகளை தற்போதைய அரசாங்கம் அவமதிக்கும் வகையில் செயற்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நெருக்கடிகளின் அறிவிப்பாளரை போன்று செயற்படுகிறார். நாட்டின் பொருளாதார நெருக்கடி தேசியத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் காணப்படுகிறது. பொருளாதார நெருக்கடிகளை பிற நாடுகள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பதை அவதானிக்க முடிகிறது.

ஆசிய நாடுகளுக்கு ரஷ்யா தனது வர்த்தக சந்தையில் வாய்ப்பு வழங்கியுள்ள நிலையில் இந்தியா அதன் பயனை முழுமையாகப் பெற்றுக்கொண்டுள்ளது. ஆனால், ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலைக்கு எரிபொருளை பெற்றுக்கொள்ள அதிக சாத்தியம் காணப்படும் பட்சத்திலும் அரசாங்கம் அது தொடர்பில் அவதானம் செலுத்தமால் பைத்தியம் போல் செயற்படுகிறது.

ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கத்துக்கு சர்வதேசத்தின் அங்கீகாரம் கிடையாது. ஆகவே, ஜனாதிபதியை நாம் நிர்வாகியாக்கி சர்வ கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க சகல தரப்பினரும் முதலில் ஒன்றிணைய வேண்டும். பொருளாதார நெருக்கடியை சாதகமாகக் கொண்டு வெளிநாடுகள் நாட்டில் தடம் பதித்தால் அது மேலும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். – என்றார்.

# சிறுவர்கள் தொடர்பான கட்டளை சட்டத்தைத் திருத்தத் தீர்மானம்

சிறுவர்கள் மற்றும் இளையவர் தொடர்பான கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கும், சிறுவர் பாதுகாப்பு மற்றும் நீதி தொடர்பாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சமவாயத்தில் 18 வயதுக்குக் குறைவான எந்தவொரு பிள்ளையும் சிறுவர் எனப் பொருள்கோடல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த சமவாயத்துக்கு இணங்கி அதன் ஏற்பாடுகளை உட்சேர்த்து சிறுவர்கள் மற்றும் இளையவர் தொடர்பான கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2020 செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானத்துக்கமைய சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, மேற்படி சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை, பாதுகாப்பு மற்றும் காப்பீடுகள் தேவையான பிள்ளைகள் தொடர்பாக வழக்கு விசாரணைகளுக்கோ அல்லது சட்டத்தை மீறுகின்ற பிள்ளையொருவருக்கு எதிராக வழக்கு விசாரணைக்காக நீதிமுறை அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் மற்றும் பிள்ளைகள் தொடர்பாக வேறு விதத்தில் நீதிமுறை அதிகாரத்தை செயற்படுத்தும் நீதிமன்றங்களை நிறுவுவதற்கு இயலுமை கிட்டும் வகையில் சிறுவர் (நீதிமுறைப் பாதுகாப்பு) தொடர்பான சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2015 பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படை சட்டமூலத்துக்காக இரண்டு விசேட நிபுணத்துவக் குழுக்கள் மூலம் ஆராய்ந்து மேலும் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படை சட்டமூலத்தில் குறித்த முன்மொழிவுகளையும் உட்சேர்த்து இறுதிச் சட்ட மூலத்தைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# பசறையில் பதுக்கி வைக்கப்பட்ட எரிபொருள் பொலிஸாரால் மீட்பு!

எரிபொருளை பதுக்கி வைத்திருந்த நபரொருவரை, பசறைப் பொலிஸார் நேற்று (செவ்வாய்க்கிழமை) கைது செய்துள்ளமையோடு, பதுக்கி வைக்கப்பட்டிருந்த எரிபொருளையும் மீட்டுள்ளனர்.

பசறைப் பகுதியின் டெமேரியா பெருந்தோட்டப்பிரிவைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருப்பவராவார்.

பசறைப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து, குறிப்பிட்ட பெருந்தோட்டப்பிரிவிற்கு விரைந்த பொலிஸார், அந்தத் தோட்டப்பிரிவை சுற்றிவளைத்து, தேடுதல்களை மேற்கொண்டபோதே, பதுக்கிவைக்கப்பட்ட எரிபொருள் மீட்கப்பட்டது. அதனை பதுக்கி வைத்தவரும் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட நபர், பதுளை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று கொள்கலன்களில் டீசல் நிரப்பப்பட்டிருப்பதாகவும், அதில் நூறு லீற்றர் டீசல் இருக்கலாமென்று, பொலிஸார் தெரிவித்தனர்.

# ஜனாதிபதி இல்லம் உள்ள வீதியால் ஹிருணிகா பயணிப்பதற்குத் தடை!



கொழும்பில் உள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குச் செல்லும் வீதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர பயணிப்பதற்குப் பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

இது தொடர்பாக சமூக ஊடகத்தில் ஒரு காணொலி வெளியாகியுள்ளது.

அதில், தனது இரண்டு நண்பர்களுடன் மேற்படி வீதியில் அமைந்துள்ள ஒரு வங்கிக்கு செல்வதற்கு அந்தப் பகுதிக்கு வந்தேன்.

எவ்வாறாயினும், பொலிஸார் உடனடியாகத் தடுப்பு வேலிகளை வைத்து, பொது மக்களுக்கு வீதியை திறந்திருந்த போதும், தன்னை வீதிக்குள் நுழைய விடாமல் தடுத்தனர் என ஹிருணிகா தெரிவித்துள்ளார்.

# விநோதமான முடிவுகளை எடுப்பதை விடுத்து அரசாங்கம் உடனடியாக பதவி விலகவேண்டும்

## அநுரகுமார வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 29

அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருள்களை வழங்குவது என்ற அரசாங்கத்தின் தீர்மானம் காரணமாக பொதுமக்களின் வாழ்க்கை முற்றாக குழப்பமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தோல்வியடைந்து விட்டதை இது மீண்டும் நிரூபித்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ள அவர் நோயாளிகள் வைத்தியசாலைக்குச் செல்ல முடியாத நிலையும் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலையும் காணப்படுகின்றது. அனைத்து தொழில் துறையும் முடக்கப்பட்டுள்ளது. நாடு முடக்கல் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

விநோதமான முடிவுகளை எடுப்பதற்கு பதில் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என ஜே.வி.பியின் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# எரிபொருள்கள் கொள்வனவிற்கு நிதியை ஒதுக்கீடுசெய்ய மத்திய வங்கி இணக்கம்

கொழும்பு, ஜூன் 29

எரிபொருள் கொள்வனவிற்கு நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி முன்வந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு மிகவும் இறுக்கமான முறையில் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு இணங்கியுள்ளார்.

கையிருப்பில் உள்ள நிதியைப் பயன்படுத்தி எரிபொருள் கொள்வனவில் ஈடுபடுமாறு ஜனாதிபதி கடந்த திங்கட்கிழமை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

நாட்டுக்கு எரிபொருளை இறக்குமதி செய்யும் விநியோகிக்கும் நிறுவனங்களுடனான பேச்சுகளின் போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்திருந்தார்.

எரிபொருள் விநியோகத்தை மீள ஆரம்பிப்பதற்கு மத்திய வங்கி இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஊடாக எரிபொருளை வழங்குவதற்கான இணக்கப்பாடும் இந்தச் சந்திப்பில் எட்டப்பட்டது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழ்ப் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=